பல்கட்டுவதில்
கைதேர்ந்தவர்கள் கண்ணாடி
வழங்குவதில்
அனுபவஸ்தர்கள்.
பல்கட்டுவதற்கும்
கண்ணாடி
பெற்றுக் கொள்ளவும்
எம்மை நாடுங்கள்!
முப்பது வருட அனுபவ
பாதையில்......
பி. ஐ. பர்னான்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ்
வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

முக்கிய அறிவித்தல்
எமது யாழ்நகர
ஆஸ்பத்திரி வீதிக் கிளை
தற்காலிகமாக
மூடப்பட்டுள்ளது.
சகல தேவைகளுக்கும்
தலைமை நிலையத்துடன்
தொடர்பு கொள்ளுங்கள்
பி. ஐ. பர்னான்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ்
வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.

கலி 5: பிரமோதூத ஞூ ஆடி மீ 13 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 06 (29-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 148

# திருமலை மாவட்டத்தில் புலிகள் தீவிர தாக்குதல்!

## கட்டைபறிச்சான் சம்பவத்தில் மட்டும் 15 ராணுவம் பலி! ஆயுதங்கள் மீட்பு!!

கொழும்பு, ஜூலை 29

**திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் மீண்டும் தமது தாக்குதல்களைத் தீவிரப் படுத்தியிருக்கிறார்கள்.**

**கட்டைபறிச்சானில் மட்டும் நேற்றுக்காலை நடந்த ஓர் அதிரடித் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 15 பேர் உயிரிழந்தனர். மேலும் 15 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். பெரும் எண்ணிக்கையான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன.**

30 பேர் கொண்ட இராணுவத்தினரின் ரோந்து அணி ஒன்றை விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்கியதாகவும்—

அதில் 14 படையினர் உயிரிழந்ததாகவும்—

எஞ்சிய 16 பேரும் படுகாயமுற்ற நிலையில் அருகில் இருந்த இராணுவ முகாமுக்குத் தப்பிச் சென்றதாகவும் ஸ்ரீ லங்கா இராணுவ தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் இந்தச் சம்பவத்தில் 15 படையினர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின் போது பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன:-

★ எவ். என். ஸி. - 10
★ மகஸீன் - 30
★ 5.56 ரவை - 1,050
★ கினி மினி-எல்.எம்.ஜி-1
★ எஸ். எல். ஆர் - 3
★ ஷொட்கன் - 1
★ நேட்டோ ரவை - 120

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தள்ளாடி பலாலிக்கும் ரஞ்சன் வந்தார்

கொழும்பு, ஜூலை 29

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று முன்தினம் தமது குழுவினருடன் பலாலி இராணுவ முகாமுக்கும், தள்ளாடி இராணுவ முகாமுக்கும் விஜயம் செய்தார் என்று கூறப்பட்டது.

அங்கு அவர் படையினருடன் உரையாடியதோடு, காயமுற்ற சிப்பாய்களையும் சந்தித்து நலன் விசாரித்தார்.

## பலாலியில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 29

பலாலிப் பகுதியில் நேற்றும் தொடர்ந்து மோதல் இடம் பெற்றது ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து முழுத் தகவல்களும் கிடைக்கவில்லை.

எனினும் பலாலியில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

## ★ இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது!

### பிரதமர் டி.பி. விஜேதுங்கா ஒப்புக் கொள்கின்றார்

மாலே, ஜூலை 29

**இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது என்பதை ஸ்ரீலங்கா பிரதமர் டி. பி. விஜேதுங்கா ஒப்புக்கொண்டார்.**

**மாலைதீவில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.**

இனப்பிரச்சினையைத் தீர்க்க கலந்தாலோசனை, இணக்கம் காணல், கருத்துடன்பாடு ஆகியவற்றிலேயே ஜனாதிபதி பிரேமதாஸா நம்பிக்கை வைத்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியையே வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் தற்சமயம் எடுத்து வருகிறது.

விடுதலைப் புலிகளுடன் நடத்தும் பேச்சுக்களில் சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தம் தேவை என்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை. இது சம்பந்தமான பூர்வாங்க அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

-இப்படி பிரதமர் விஜேதுங்கா மேலும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் நிலைமையைச் சமாளிக்க இந்திய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று முன்தினம் வவுனியாவுக்கு ரஞ்சன், ஹேமாவுடன் வந்த தமிழ்ப் பிரதிநிதிகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 29

நேற்று முன்தினம் வவுனியாவுக்கு வந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா, ஜனாதிபதியின் பாரியார் ஹேமா பிரேமதாஸா ஆகியோருடன் தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளும் வந்ததாகத் தெரிய வருகிறது.

அமைச்சர் ரஞ்சனுடன் துணைஅமைச்சர்கள் திருமதி. ராஜமனோகரி புலேந்திரனும் எம் எஸ். செல்லச்சாமியும் வந்திருந்தனர்.

மேலும் தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த திரு. செல்வம், ஈ.பி.ஆர்.எல்.எவ்.வைச் சேர்ந்த எம்.பி திரு. இரா. குகனேஸ்வரன், புளொட்டைச் சேர்ந்த திரு. மாணிக்கம்தாஸன், திரு செந்தில் ஆகியோரும் அவர்களுடன் வவுனியா வந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

## இந்தியா 376 ஓட்டங்கள்

லண்டன், ஜூலை 29

இங்கிலாந்துக்கு எதிராக லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று ஆட்டம் முடிவடைந்த போது இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 376 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை 4 விக்கெட் இழப்புக்கு 653 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஏற்கனவே நிறுத்திக் கொண்டது என்பது தெரிந்ததே. [உ]

## திருமலையில் மீண்டும் சிங்களவர் குடியேற்றம்!

யாழ்ப்பாணம், ஜூலை 29

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற சிங்கள மக்கள் மீண்டும் படையினரின் பாதுகாப்புடன் திருகோணமலைக்குக் கொண்டு வரப்பட்டு குடியமர்த்தப்படுகின்றார்கள்.

அவர்கள் ஏற்கனவே குடியிருந்த இடங்களிலேயே அவர்களை மீளவும் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை திருமலை அரசாங்க அதிபர் மேற்கொண்டிருப்பதாகவும் அறிய வருகிறது.

சுமார் 5 ஆயிரம் சிங்களவர்கள் பஸ்கள் மூலம் திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் —

அவர்களை மீளக்குடியமர்த்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முன் எப்போதும் இல்லாதவாறு ஆயுதப் படையினருக்கு இழப்பு!

### கிழக்கில் அதிரடித் தாக்குதலால் நிலைகுலைவாம்

கொழும்பு, ஜூலை 29

வடக்கு-கிழக்கு யுத்தம் ஆரம்பமான பின்னர் ஆயுதப் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்பு முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்து இருப்பதாக பி.பி.சி. நேற்று அறிவித்தது.

பி. பி. சியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொரிஸின் அறிக்கைப்படி, இதுவரை நடந்த சண்டையில் ஆயுதப் படையினரில் கொல்லப்பட்டவர்கள் அல்லது காணாமற் போனவர்கள் என்று கருதப் படுவோரின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டிவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஆயுதப்படையினரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன.

அதனால் ஆயுதப்படையினருக்கு வடக்குப் பகுதி குறித்து முழுக் கவனத்தையும் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் பி.பி.சி. செய்தியாளர் தெரிவித்தார். [உ-எ]

## நேற்றும் 800 அகதிகள்

சென்னை, ஜூலை 29

சுமார் 800 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று சனிக்கிழமை 23 படகுகளில் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர். (இ-எ)

## இரவுக் குண்டு வீச்சினால் யாழ்.பஸ் நிலையத்தில் குழி!

### பெருமளவிலான கடைகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நேற்று முன்தினம்[வெள்ளி] இரவு யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினால் பஸ் நிலையப் பகுதி பெரிதும் சேதமடைந்திருக்கிறது.

பஸ் நிலையத்தில் எஞ்சிக் கிடந்த - பயணிகள் தரிப்பு கொட்டகைகள் - சின்னாபின்னமாகி விட்டன.

காரைநகர் பஸ் தரிப்பு நிலையத்துக்குப் பக்கத்தில் ஆழமான பெரும் குழி ஒன்று காணப்படுகிறது.

பஸ் நிலைய அலுவலகத்துக்குச் சமீபமாக இருந்த பல கடைகள் முற்றாகச் சேதமுற்றிருக்கின்றன.

ராணி தியேட்டரின் முன் பகுதி, நவீன சந்தைக் கட்டடத்தில் உள்ள சில கடைகள் என்பனவும் சேதமுற்றன. [உ]

## வவுனியாவில் 100 கடைகள் சூறையாடப் பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 29

கடந்த 27 ஆம் திகதி வவுனியா நகரப் பகுதியில் உள்ள சுமார் நூறு கடைகளை இராணுவத்தினரும், சிங்கள குண்டர்களும் உடைத்து சூறையாடியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

அன்றைய தினம் வவுனியா காமினி மகாவித்தியாலய இராணுவ முகாம் மீதும், ஜோசப் முகாம் மீதும் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கி பிரயோகங்களும் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

### ஈழத் தமிழர் பிரச்சினைபற்றிப் பேச

## முதலமைச்சர் கருணாநிதி புதுடில்லி விரைகிறார்

சென்னை, ஜூலை 29

இலங்கைத் தமிழர் பிரச்சினைகுறித்து இந்தியப் பிரதமர் திரு. வி. சிங்குடன் பேசுவதற்காக தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை புதுடில்லிசெல்கிறார்.

இலங்கையிலிருந்து பெருமளவிலான அகதிகள் தமிழகத்துக்கு வந்து குவிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் முதலமைச்சர் மேற்கொள்ளவிருக்கும் இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



இராணுவத் தீர்வு இல்லையெண்டால் பிறகு ஏன் அதிலை மினக்கெடுகினம்? ஒண்டுமாப் புரியேல்லை...... பெரிய சுத்துமாத்தாய் இருக்குது...!?

## ஜீ.சி.ஈ.(சாதாரணதர) பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின

### பலருக்கு 8 ஆவது பாட முடிவு கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஜீ.சி.ஈ. (சாதாரணதர) பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன. பரீட்சை முடிவுகளில் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த 4 மாணவர்கள் எட்டு பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்.

ஆனால் பல பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு ஏழுபாடங்களின் பரீட்சை முடிவுகளே கிடைத்திருக்கின்றன.

சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்குரிய செயல்முறைப் பரீட்சை நடைபெறாததால் இந்தப் பாடத்துக்குரிய பரீட்சை முடிவுகள் வெளிவரவில்லை.

உதாரணமாக யாழ் இந்து, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி போன்ற பல பாடசாலைகளில் ஏழு பாடங்களில் அதிவிசேட சித்திபெற்ற பலருக்கு எட்டாவது பாடத்திற்குரிய முடிவு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஜீ.சி.ஈ. (சாதாரணதர) பரீட்சை முடிவுகளை நேற்றுக் காலை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் சகல கோட்ட அதிகாரிகளிடமும் கையளித்தார்.

நேற்று வெளியான முடிவுகளில் சிறந்த பெறுபேறுகள் வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

சென். ஜோன்ஸ் கல்லூரி: எட்டு அதிவிசேட சித்தி - 4 பேர்.

வேம்படி மகளிர் கல்லூரி: எட்டு அதிவிசேட சித்தி-ஒருவர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி: எட்டுஅதிவிசேட சித்தி-

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி அரிசி ஆலையில் 83 மூடை சீனி மீட்பு!

பூநகரிப் பகுதியில் பிரபல அரிசி ஆலை ஒன்றில் நெல் மூடைகளுக்குள் மறைத்து வைத்த எண்பத்திமூன்று மூடை சீனி கைப்பற்றப்பட்டன.

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான சீனி மூடைகளே இவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்க பூநகரிப் பொறுப்பாளர் சாம் சீனி மூடைகளை மீட்டு, பொதுமக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்திருந்தார். (ஓ-30)

## சுபநேரம்

29-7-90
ஞாயிற்றுக்கிழமை ஆடி 13
சுபநேரம்:
09-03—10-33
இராகுகலம்
04-33—06-03
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## கல்வித் தரம் வீழ்ச்சி என கல்விமான்கள் கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 29

"யாழ்- மாவட்டத்தின் ஜீ.சி.ஈ. (சாதாரணதர)பரீட்சை முடிவுகள் கல்வித்தரத்தின் வீழ்ச்சியையே எடுத்துக்காட்டுகின்றன".

இப்படி கல்விமான்கள் பலர் கருத்து வெளியிட்டனர்.

கடந்தவருடங்களை விட இம்முறை குறைந்த அளவினரே சித்தி அடைந்துள்ளனர் என்றும் உயர் வகுப்புக்கு தகுதி பெற்றவர்களும் குறைவாக உள்ளனர் என்றும் பலரும் கருத்துத் தெரிவித்தனர். [இ - 3]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

உருத்திரபுரத்திலிருந்து வரும்போது கண்டாவளைக்கும் இயக்கச்சிக்குமிடையில் முக்கிய சான்றிதழ்கள் அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க.சந்தையா, முருகையா கடை, முகமாலை. என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13846)

வேலுச்சாமி பரமேஸ்வரன் இல: 692971086 அடையாள அட்டை தவறிவிட்டது. எடுத்தவர்கள் பிரதம குருக்கள் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம், புகையிரத நிலைய வீதி, சுண்ணாகம். முகவரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். (13847)

### V. K. M. Farm Centre

எம்மிடம் சுத்தமான முறைப்படி தயார் செய்யப்பட்ட முட்டையிடும் கோழிகளுக்கான தீனி (Layer mash) பெற்றுக் கொள்ளலாம். இறைச்சிக் கோழி சில்லறை விலை 50/- No: 12, கனகசபை லேன், [யாழ். இந்துக் கல்லூரி பின்பக்கம்] யாழ்ப்பாணம். [13848]

### குழாய்க் கிணறுகாரருக்கு

உங்கள் வீட்டு தண்ணீர் ராங்குகளை நிரப்புவதற்கு நாடுங்கள். சாதாரண ராங் ஒன்றிற்கு ரூபா 150/- மட்டுமே யூனிவேர்சல் சேவகர், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு (கல்வியங்காடு சந்தியில் இருந்து 100யார் தூரத்தில்) (13951)

## மருத்துவசேவை

யாழ்ப்பாணம், ஜூலை 29 யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சங்கானை அகதி முகாமில் இலவச மருத்துவ சேவையை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## பயிற்சிக் கல்லூரி மாணவர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 29 யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கான ஜூன் மாதச் சம்பள காசோலைகள் ஆகஸ்ட் 1 ஆம் திகதி காலை மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலையில் வைத்து வழங்கப்படும்.

பயிற்சிக் கல்லூரி நடைபெற்ற நாட்களுக்கு மட்டுமே சம்பளம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## நிரந்தர அதிபர்கள்

கொழும்பு, ஜூலை 29 31. 12. 1988 வரையான காலத்தினுள் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக பாடசாலை பதில் அதிபர்களாகப் பணியாற்றிய அனைவரும் நிரந்தர அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## சுன்னாகத்தில்

மயிலணி, ஜூலை 29 சுன்னாகத்தில் வெள்ளி மாலை ஹெலி பல தடவை வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. பொம்மர் விமானமும் வட்டமிட்டுச் சென்றது. (இ-89)

## மட்டக்களப்பு இளைஞருக்கு இராணுவப் படையில் இடம்

கொழும்பு, ஜூலை 29 இலங்கை இராணுவ நிரந்தரப் படையில் சேர்வதற்கு மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சு விண்ணப்பங்களை கோரியிருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

விண்ணப்பங்கள் அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (உ-எ)

## பயிற்சிகள்

சாவகச்சேரி, ஜூலை 29 மட்டுவில் பகுதியில் உள்ள 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தற்பாதுகாப்புப் பயிற்சிகள் கடந்தவாரம் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

25 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும், பெண்களுக்குமான பயிற்சிகளும் தொடர்ந்து நடைபெற இருப்பதாகக் கூறப்படுகிறது. (இ-31)

## முதல் உதவி பயிற்சி

முறைசாராக் கல்விப் பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் உதவிப் பயிற்சிகள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்றன. (இ-31)

## வீடு வந்து சேரவில்லை

சிவபாதசுந்தரக்குருக்கள், கைலாசநாதக்குருக்கள் சம்பூர் பத்திரகாளி கோவில் உற்சவத்திற்கு 01-06-90 ஆம்திகதி இங்கிருந்து புறப்பட்டுச் சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை. அவரது விவரம் தெரிந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:
ச. மகேஸ்வரக்குருக்கள்,
அரசுப்பிள்ளையார் கோவில்,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

(13694)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்**
(பாறன்)

பிறப்பு: 08 - 12 - 1929
மறைவு: 29 - 06 - 1990

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, மக்கள், அம்மா,
சகோதரர், சகோதரிகள்.

தகவல்:
திருமதி இரத்தினசிங்கம்.
29, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (13844)

# வெளி மாவட்டங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட பஸ்சேவை

## இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 29 இன்றுமுதல்மீண்டும் வெளி மாவட்டங்களுக்கான தனியார் பஸ்சேவைகள் யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பமாகும். ஆயினும் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

பயணம் மேற்கொள்பவர் பற்றிய விசாரணைகள் கடந்த 2 நாட்களாக நடைபெற்றன. வெளி மாவட்டங்களுக்கு செல்லும் காரணம், அங்குள்ள முகவரி என்பன விசாரிக்கப்பட்டன.

தகுந்த காரணம் இன்றிச் செல்ல முயற்சித்தவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மினிபஸ் ஆசனப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறாக ஆசனப் பதிவு செய்தவர்களை மட்டுமே ஏற்றிக்கொண்டு பஸ்கள் இன்று முதல் சேவையாற்ற உள்ளன.

இதே நடைமுறை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று சொல்லப்பட்டது. (இ-9)

## டிறிபேர்க்கில் தங்கியிருந்த அகதிகள் இடம் மாற்றம்

சாவகச்சேரி, ஜூலை 29 சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் தங்கியிருந்த இடம் பெயர்ந்தோர் அனைவரும் மட்டுவில் மகாவித்தியாலயம், கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். டிறிபேர்க்கில் தங்கி இருந்த போது இவர்களுக்கான உதவிகளை சாவகச்சேரி தென் இந்திய திருச்சபையும் செய்துவந்தது.

தென்மராட்சிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வருபவர்கள் இனிமேல் டிறிபேர்க் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டு பின்னர் வேறு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இடம்பெயர்ந்தோருக்கான இரண்டாம் வார நிவாரணம் கிடைக்க உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-117-31)

## புங்குடுதீவில்

புங்குடுதீவு, ஜூலை 29 பொம்மர் நோட்டமிடுவதன் காரணமாக புங்குடுதீவுப் பகுதியில் மக்கள் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர். (இ-131)

## வல்லையில் நேற்று மீண்டும் ஹெலியிலிருந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 29 வல்லைப்பகுதியில் பயணம் செய்த வாகனங்கள் மது நேற்றும் ஹெலியிலிருந்து தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது.

நேற்றுக்காலையில் 11 மணியளவில் இச் சம்பவம் நடந்தது.

பலாலியிலிருந்து ஆனையிறவுப் பகுதியை நோக்கிச் சென்ற ஹெலிக்கொப்டர் ஒன்றே இத் தாக்குதலை நடத்தியது.

இந்த சம்பவத்தின் போது மினிபஸ்ஸின் சாரதி ஆசனத்துக்கு பக்கத்தில் துப்பாக்கி ரவை ஒன்று துளைத்துக் கொண்டு சென்றது. எவரும் காயம் அடையவில்லை.

எனினும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது மினி பஸ்ஸில் இருந்து குதித்ததினால் ஒருவர் காயம் அடைந்தார். (இ-9)

## முன்னைய ஆட்சியாளர் விட்ட தவறு

கொழும்பு, ஜூலை 29 முன்னைய ஆட்சியாளர்கள் விட்ட நிர்வாகச் சீர்கேடுகள் தான், வடக்கு - கிழக்கிலும் ஏனைய சில பகுதிகளிலும் தீவிரவாதம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தன.

ஜனாதிபதி பிரேமதாஸா கேகாலையில் நடந்த நடமாடும் ஜனாதிபதி செயலகக் கூட்டத்தில் பேசுகையில்முன் கண்ட தகவலை வெளியிட்டார். (இ-எ)

## உணவு - உடை சேகரிப்பு

கொழும்புத்துறை, ஜூலை 29 இராணுவ வன்முறைகளால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள அகதிகளுக்கு உதவும் பொருட்டு தென்மராட்சி மட்டுவில் இந்து இளைஞர் மன்றம் உடைகள், உணவுப்பொருள்கள் போன்றவற்றை பொதுமக்களிடமிருந்து சேகரித்து வருகிறது, (இ-30)

## பதுங்கு குழிகளை வெட்டி உதவும் சிந்தனை தேவை

### தென்றல் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 29 சந்திகளில் எவராவது அமைக்கும் பதுங்கு குழிகளில் நாம் ஒதுங்கலாம் என்ற எண்ணத்தை விடுத்து பொதுமக்களுக்குரிய பதுங்கு குழிகளை நாம் எவ்வாறு வெட்டலாம் என்ற சிந்தனையை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரியகுளம் சமூக சேவைப் பிரிவான 'தென்றல்' ஆரம்பக் கூட்டத்தில் பேசுகையில் கல்லூரி விரிவுரையாளர் திரு. அ. குமாரவேலு இவ்வாறு கூறினார்.

விரிவுரையாளர் திரு. என் குழந்தைவேலு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. குமாரவேலு மேலும் பேசியதாவது:-

''காலம் வரும் போது நாம் போராட்டத்திற்கு உதவி செய்யலாம் என்று இனியும் மாணவர்கள் ஒதுங்கி இருக்கக் கூடாது. இப்பொழுதும் ஒதுங்கி இருந்தால் இனி என்றுமே போராட்டத்துக்கு மாணவர்களால் உதவிசெய்ய முடியாது போய்விடும். கல்வி இரண்டு வருடங்கள் தடைப்பட்டால் மாணவர் பெற்று வந்த கல்வியின் தரம் எவ்விதத்திலும்குறைந்துவிடாது. இரண்டு வருடத்தின் பின்னரும் கல்வியைத் தொடரலாம். ஆதலால் மாணவர்கள் இக் காலத்தில் போராட்டத்தில் முழுமையான பங்களிப்பு செய்யவேண்டியது அவசியம்

இப்படி அவர் கூறினார்.

விரிவுரையாளர் திரு. என். குழந்தைவேலு பேசுகையில், தரப்படுத்தல் சம்பந்தமான நிகழ்வுதான் இன்றைய போராட்டத்துக்கு வழி வகுத்தது என்றும், ஆகவே மாணவ சமுதாயத்தினர் இன்றைய போராட்டத்தில் ஏதோ ஒரு வழியில் பங்களிப்பது அவசியம் என்றும் கூறினார்.

''தென்றல்'' தலைவர் திரு. கா. யோ. கிரிதரன் பேசுகையில், குண்டு வீச்சினால் ஏற்பட்ட கடும் காயங்களில் இருந்து போராளிகளையும், மக்களையும் காப்பதற்கு தேவையான இரத்தத்தை மாணவர்கள் முன் வந்து தானம் செய்ய வேண்டியது அவசியம். அந்த வகையில் ''தென்றல்', அங்கத்தினர் விரைவில் இரத்ததானம் செய்ய இருக்கிறார்கள் என்றார். (இ)

## பயிற்சி

சாவகச்சேரி, ஜூலை 29 போர்க்கால தற்காப்புப் பயிற்சிகள் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. (இ)

## கொக்குவில் இந்து மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 29 கொக்குவில் இந்துக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்களையும் இன்ரறக்ட் கழக உறுப்பினர்களையும் நாளை திங்கள் காலை 9 00 மணிக்கு கல்லூரியில் சந்திக்குமாறு அதிபர் திரு. ஏ. பஞ்சலிங்கம் கோரி உள்ளார். (இ)

## இருவர் காயம்

கோப்பாய், ஜூலை 29 கடந்த வியாழக்கிழமை சிறுப்பிட்டியில் இரண்டு ஹெலிகள் மாறி மாறி துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. இருவர் காயமுற்றனர். (இ-72)

# இந்தியாவில் திடீர் தேர்தலை நடத்தும் சாத்தியம் எதுவுமில்லை

## ஜனதாதள் தலைவர் கூறுகிறார்

இந்தியாவில் திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சாத்தியக் கூறு எதுவும் இல்லை [illegible] தனது ஐந்தாண்டு கால ஆட்சி முடியும் வரை [illegible] முன்னணி அரசு பதவியில் இருக்கும் என்று ஜனதாதள் தலைவர் எஸ்.ஆர்.பொம்மை தெரிவித்தார்.

இடைக்கால [illegible] பொதுத் தேர்தல் ஒன்றை [illegible] இருக்கும்படி பாரதிய ஜனதாக் கட்சியும் இந்திரா காங்கிரஸ் கட்சியும் தங்கள் உறுப்பினர்களையும், தொண்டர்களையும் உஷார் படுத்தியுள்ளன.

இது குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே திரு. பொம்மை முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

## தொழிலாளருக்கு ஊதியம் தொடர்ந்து வேலைவேண்டும்

### அரச ஒப்பந்தகாரர் சங்கம் கேட்கிறது

யாழ்ப்பாணம் ஜூலை 29 இன்றுள்ள நிலையில் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்ட வேலைத்தலத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதுடன் அவர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைக்க வழி செய்யுமாறு வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம் ஒப்பந்தக்காரர்களைக் கோரியுள்ளது.

ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு இந்த நிலைக்குத் தீர்வுகாணுமாறும் கோரப்பட்டுள்ளது.

அந்த தொழிலாளர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சங்கத்தில் பதிவு செய்த சகல ஒப்பந்தக்காரர்களும் சங்க அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (இ - 3 - 5)

## அகதிகளுக்கு நகரசபை ஊழியர் உதவி

பச்சிலைப்பள்ளி, ஜூலை 29 சாவகச்சேரி நகரசபையில் பணிபுரியும் சகலதர ஊழியர்களும் தென்மராட்சியில் தஞ்சமடைந்துள்ள இடம் பெயர்ந்தோர் நிவாரணத்துக்காக தமது ஜூலை மாதச் சம்பளத்திலிருந்து ஒரு தொகைப் பணத்தை வழங்கியுள்ளனர்

இந் நிதி தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்திடம் ஒப்படைக்கப்படும். (இ - 117)

## ஓராண்டு நினைவு நாள்

தாய் மடியில்: 29- 10- 1958

இறை அடியில்: 09- 08- 1989

ஆண்டுத் திதி: 29- 07- 1990




அமரர்
டாக்டர் (செல்வி)
**சிங்கநாயகம் கலாநாயகி**
(B. S. M. S யாழ், பல்கலைக்கழகம், கைதடி)

உன் பிரிவு மெய்யென்று சொல்ல
நினைவலைகள் விடுவதில்லை!
எங்குடும்பப் பூங்காவில்
முதல் மருத்துவப் பூவாகி காயாகி
கனிய முன்னர் காலனவன் கவர்ந்த
முதலாண்டு திதியின்று
ஓராண்டு ஆனலென்ன
ஓராயிரம் ஆண்டுகள் போனாலென்ன
எங்கள் மனத்திரையில் உந்தன் நினைவுகள்
ஓடிக் கொண்டேயிருக்கும்.

என்றும் உன் நினைவால் வாழும்:
அன்னை, சகோதரங்கள், பெறாமக்கள்,
மருமக்கள், மைத்துன - மைத்துனியர்.

வயாவிளான்,
1990 -07 -29. (13850)

## 31ஆம் நாள் வீட்டுக் கிரியை அழைப்பிதழ்



**திரு. சுப்பிரமணியம் பேரம்பலம்**

தோற்றம்: 1922 - 10 - 04
மறைவு: 1990 - 06 - 29

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், யாழ். ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட உயர் திரு. சுப்பிரமணியம் பேரம்பலம் அவர்களின் வீட்டுக் கிரியைகள் 29 - 07 - 90 ஞாயிற்றுக்கிழமை (இன்று) அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் எம்முடன் கலந்துகொள்வதோடு மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

6, கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (13953)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இரத்தம்! இரத்தம்!

பண்டைத் தமிழர்கள் தானங்களில் சிறந்தவர்கள். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற பண்பினைக் கொண்டிருந்தவர்கள். அதனால் தமிழர் சமுதாயத்தில் பலவகைத் தானங்கள் அறிமுகமாகி இருந்தன.

இன்றைய சமுதாயத்தில் தானங்களின் முக்கியத்துவம், அவசியம், சிறப்பு என்பன உணரப்படாமல்மறந்து, தூர்ந்து போனமை கவலைக்குரிய விடயமாகும்.

உலக வாழ்வில் உயிரை விட பெறுமதி மிக்கச் சொத்து எது? அதனால் உயிர்காக்கும் இரத்த தானம் முதலிடம் பெறும் தன்மையது! ஏழை, பணக்காரன், தொழிலாளி, முதலாளி என்ற வேறுபட்ட நிலை இல்லாமல், சுகதேகிகளாக இருக்கும் எல்லோரும் செய்யக் கூடிய தானமும் இரத்த தானமே. அந்த வகையிலும் இரத்ததானம் சிறப்பு பெறுகின்றது,

இதனை தமிழ்ப்பகுதி மக்கள் நன்கு உணரவில்லை. யாழ். போதனா வைத்திய சாலை உட்பட இப்பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் நிலவும் இரத்தத் தட்டுப்பாடு அதற்கு அத்தாட்சி. உயிராபத்தான ஒருவரின் உயிரை மீட்பதற்கு ஆயிரக் கணக்கான ரூபா கொடுத்து இரத்தம் வழங்குபவரைத் தேடிப் பிடிக்கும் நிலை இப்போது. இரத்த தானம் வர்த்தக மயமாக்கப் பட்டிருப்பதும், தரகர்கள் கொட்டமும் வேண்டாத சாபக்கேடு!

இரத்ததானம் செய்வதால் உடல்நலம் கெட்டுவிடும் என்ற தவறான எண்ணம் மக்களிடையே வளர்ந்திருப்பதே இரத்தத் தட்டுப்பாட்டுக்குக் காரணம். சில வேளைகளில் நோயாளிகளின் இரத்த உரித்துடையவர்கள் என்று சொந்தம் கொண்டாடுபவர்களே அந்த நோயாளிக்கு இரத்த தானம் செய்வதற்குப் பின்னடித்து விடுகிறார்களே!

16 வயது தொடக்கம் 45 வயது வரையான சுகதேகிகள் (இருபாலாரும்)எவ்வித பீதியும் இன்றி இரத்த தானம் செய்யலாம். ஒரு சராசரி மனிதனின் உடம்பில் பத்துப் பைந்து இரத்தம் ஓடுகிறது. அதில் ஒரு பைந்தை வழங்குவதால் எவ்வித பாதகமான பின் விளைவும் ஏற்படாது. மாறாகப் புதிதாக இரத்தம் உண்டாகி உடம்பில் புதுத் தெம்பைத் தரும். இரத்த உற்பத்தி உறுப்புகளைச் சீர்ப்படுத்தும். இரத்ததானம் மூலம் இழக்கப்படும் இரத்தம் ஒருவார காலத்தில் மீளவும் உடலில் உற்பத்தியாகிறது. —இவை இரத்த தானம் சம்பந்தப்பட்ட சில வைத்திய உண்மைகள்.

எனவே, இரத்த தானம் செய்வதால் உடல்நலம் பாதிக்கப்படும் என்ற மாயையிலிருந்து எமது மக்கள் விடுபட வேண்டும். இரத்ததானம் செய்வதற்குத் தாமாக முன்வர வேண்டும்.

வெளிநாடுகளில் (ஏன் இந்தியாவில்கூட) பெரும் நிறுவனங்களில், நலன்புரிச் சங்கம்போல, இரத்ததானம் செய்வோர் சங்கங்கள் உண்டு. அதேநிலை இங்கும் உருவாக்கப்படவேண்டும். பாடசாலைகள், சனசமூக நிலையங்கள்,விளையாட்டு மன்றங்கள் மட்டத்தில்கூட இரத்ததான சங்கங்களை உருவாக்கி உயிர்காக்கும் அளப்பரிய சேவையை ஆற்றலாம்.

அதுவும் ஆயுதப்படைகளின் பொல்லா ஆயுதங்கள் தமிழர்களின் இரத்தத்தைக் குடிக்கும் இவ்வேளையில், உயிரிழப்பு எண்ணிக்கையைக் குறைப்பதற்கு இரத்ததானம் அவசியம். தமிழரின் இரத்தம் ஆறாக ஓடும் இந்நாட்களில் இரத்ததானம் முதன்மைத் தேவையாகிறது.

இரத்தம், இரத்தம் என்ற அபயசர ஓலம் ஆஸ்பத்திரிகளில் இருந்து வராமல் தடுக்க,இரத்ததானம் செய்ய எல்லோரும் தயாராகுங்கள்! தர்மம் தலைகாக்கும் என்றால்ர இத்ததானம்உயிர் காக்கும் வல்லமைஉள்ளது.

## கோப்பாயில் 2 ஆம் கட்ட நிவாரண வேலைகள் துரிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 5,555 குடும்பங்களைச் சேர்ந்த 22,383 அங்கத்தவர்களுக்கு முதலாம் கட்ட இடம் பெயர்ந்தோர் நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவகுருநாதன் (நிவாரணப் பகுதி) இதனைத் தெரிவித்தார்.

இரண்டாவது கட்ட நிவாரணம் துரிதமாக வழங்கப் பட்டு வருகிறது. பிறமாவட்டங்களில் குறிப்பாக திருகோணமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்களுக்கு 2 ஆம் கட்ட நிவாரணப் பத்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

ஆனால் ப. நோ.கூ. சங்கங்களில் அவர்களுக்கான உணவுப் பொருள்களை வழங்க போதிய உணவுப்பொருள்கள் இருப்பில் இல்லை. உணவுப்பொருள்கள் வந்தவுடன் அவர்களுக்கான பொருள்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

### படகு மீட்பு

குருநகர், ஜூலை 29

இம்மாதம் முற்பகுதியில் பூநகரி - கல்முனைப் பகுதியில் கரைஒதுங்கிய இயந்திரப் படகு உரிமையாளர்களால் மீட்டுச் செல்லப்பட்டது. (இ-51)

## அம்புலன்ஸ் மீது ஹெலி தாக்கு

பச்சிலைப்பள்ளி, ஜூலை 29

பளை வைத்தியசாலையிலிருந்து மானிப்பாய் வைத்திய சாலைக்கு நோயாளரை கொண்டு சென்று அனுமதித்து விட்டுத் திரும்பிய பளை வைத்தியசாலை அம்புலன்ஸ் மீது கொடிகாமத்தில் ஹெலியிலிருந்துதுப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலில் அம்புலன்ஸ்கண்ணாடிகள் நொருங்கியதுடன் மேல் பகுதியும் பலத்த சேதத்திற்குள்ளாகியது.

அம்புலன்ஸை மரம் ஒன்றின் கீழ் விட்டு இறங்கி ஒளிந்து கொண்டதால் சாரதி ம. இராசரத்தினம், உதவியாளர் பி.அருணகிரிநாதன் ஆகியோர் உயிர் தப்பினர். (இ-117)

## வடக்கை கைப்பற்றிய பின்பே அடுத்த நடவடிக்கையாம்

கொழும்பு, ஜூலை 29

வடக்கு முழுவதையும் முற்றாகக் கைப்பற்றிய பின்னரே அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

## கடமைக்கு செல்லாத ஊழியர் விசேஷ விடுமுறையாக கணிப்பு

கொழும்பு, ஜூலை 29

வடக்கு-கிழக்கில் ஏற்பட்ட யுத்த நிலைமை காரணமாக கடந்த காலங்களில் அரசு ஊழியர்கள் கடமைக்குச் செல்லாத நாட்கள் விசேஷ விடுமுறைகளாகக் கணிக்கப்படும்.

பொது நிர்வாக உள்நாட்டு மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ்பெரேரா இது தொடர்பாகப் பணித்துள்ளார். (இ-எ)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

**இடுக்கண் நீங்க அருள் செய்வாயே!**

''என்று நாம் இங்கு சேர்ந்து
இனியநல் வாழ்வு கொள்வோம்''
என்றனும் தினமும் ஐயா!
ஏங்கியே பதறு கின்றோம்
இன்று நம் இடுக்கண் எல்லாம்
இரவிமுன் பனிபோல் நீங்க
அன்றலர் பொழில் சூழ் நல்லை
அறுமுகா அருள்செய் வாயே!

கவியரசு, வெண்பாமணி:
**முருகசூரியன்.**

[இன்று நல்லூர்க் கந்தசுவாமி 3 ஆம் திருவிழா]

## புலிகளுடன் சேர ஏங்கியவர்கள் நாம் பயந்ததாகக் கூறுவது அபத்தம்

### ஈ. பி. டி. பி. அறிக்கை குறித்து ஈரோஸ் பிரமுகர்

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஈழம் மக்கள் ஜனநாயகக் கட்சி [ ஈ. பி. டி. பி.] கூறுவது போல நாங்கள் பயத்தினால் தான் நடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமாச் செய்தோம். ஆனால் விடுதலைப் புலிகளுக்குப் பயந்து அல்ல. தமிழ் மக்களுக்குப் பயந்து — எமது மக்களின் அபிலாசைகளை அடைவதற்கு இந்தப் பதவிகள் பயனற்றவை, முட்டுக்கட்டை ஆனவை என்பதை உணர்ந்ததால் இராஜினாமாச் செய்தோம்.

— இப்படிக் கூறினார் ஈரோஸ் பிரமுகர் ஒருவர்.

விடுதலைப் புலிகளுக்குப் பயந்து ஈரோஸ் எம். பிக்கள் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டனா என்று ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ் தேவானந்தா விடுத்த அறிக்கை குறித்து அந்தப் பிரமுகர் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் நாட்டில் தங்கியிருந்த திரு. டக்ளஸ் தேவானந்தாவும், அவரது குழுவினரும், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான யுத்தம் வெடிப்பதற்கு, ஒரு சில வாரங்களுக்கு முன்னர் தான் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

கொழும்பில் வந்திறங்கியதும் அவர் ஈரோஸ் பிரமுகர் திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரனைச் சந்தித்தார்.

தாங்கள் ஈ. பி. ஆர். எல். எவ். விற்கு எதிரான சக்தி என்றும்—

அந்த வகையில் தங்கள் பங்களிப்பைச் சரிவரச் செய்வதற்காக விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயலாற்றத் தயார் என்றும்—

ஆகவே விடுதலைப் புலிகளின் உயர் தலைவர்களை கொழும்பில் அல்லது யாழ்ப்பாணத்தில் நேரடியாகச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்து தரும்படியும் திரு. பாலகுமாரனை திரு. டக்ளஸ் தேவானந்தா கோரியிருந்தார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு இணைந்து செயலாற்ற வாய்ப்புக் கிடைக்காதா என்று சில வாரங்களுக்கு முன்னர் ஏங்கியவர்கள் தான் இன்று நாம் விடுதலைப் புலிகளுக்குப் பயந்து எம். பி. பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டதாகக் கூறுவது சுத்த அபத்தம் —

இப்படி அந்தப் பிரமுகர் மேலும் சொன்னார். (உ)

### பீரங்கி தாக்குதல்

சாவகச்சேரி, ஜூலை 29

தொண்டமானாறு பருத்தித்துறைப் பகுதிகளில் இடம் பெறும் இரவு நேர சூடற் பீரங்கித் தாக்குதலால் மக்கள் இடம் பெயர்ந்து சாவகச்சேரிப் பகுதிக்கு வருகின்றனர். (இ-31)

### தீப்பெட்டிவிலை

கோப்பாய், ஜூலை 29

கோப்பாய் பகுதியில் தீப்பெட்டி 4 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (இ-72)

## பளைக்கு இடம் பெயர்வு

பச்சிலைப்பள்ளி, ஜூலை29

பரந்தன் பகுதியில் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்துவதால் பரந்தன்- முல்லைத்தீவு வீதியிலுள்ள மக்கள் இடம் பெயர்ந்து கால் நடையாக பளைப் பகுதிக்கு வருகின்றனர்.

பரந்தன், கண்டாவளை, புளியம்பொக்கணை தர்மபுரம் உட்பட பல பகுதி மக்கள் உடுத்த உடையுடன் வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (இ-117)

## ஜூன், ஜூலை சம்பளம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

திருகோணமலை, மட்டக்களப்பு உட்பட கிழக்குப் பகுதியில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்து வந்துள்ள தபால் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு ஜூன், ஜூலை மாதச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

# ஒரே நேரத்தில் இரு சமையல் செய்து விறகைச் சேமிக்க புதிய சூட்டடுப்பு!

தற்போதைய நிலைமையில் தமிழ் மக்கள் மீது திணிக்கப் பட்டுள்ள பல்வேறு அடக்கு முறைகளை எதிர் கொண்டு வெற்றி கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

பொருளாதாரத் தடையினால் நாம் சோர்ந்துபோகாமல் எமது போராட்டத்தினைக் கொண்டு நடாத்த பல்வேறு மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க, ஈடுசெய்ய மாற்று எரிபொருள் வளங்களைத் தேடுவதுடன் பாவிக்கும் எரிபொருளையும் சிக்கனமாகப் பாவிக்க வேண்டிய அவசியமும் கட்டாயமும்உருவாகி உள்ளன.

எரிபொருள் பிரச்சினையில் வீட்டுத் தேவைக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் அதி முக்கிய இடத்தை வகிக்கிறது. அதனாலேயே வீட்டு எரிபொருள் தேவையை சமாளிக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை இப்போது மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் தமிழீழ ஆய்வு நிறுவனம் சூட்டடுப்பை அறிமுகப்படுத்தி உள்ளது.

விரயம் குறைந்த இரட்டைச் சூட்டடுப்பின் மாதிரியானது இலங்கை மின்சார சபையிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டாலும் எமது மக்களின் பாவனைக்கு ஏற்றவாறும் உற்பத்தியாளர்களின் வசதிக்கு ஏற்றவாறும் அடுப்பில் இருந்து பெறப்படும் சக்தியின் விரயத்தினைக் குறைப்பதற்கு ஏற்றவாறும் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

பொதுவாக சூட்டடுப்பிற்குப் பயன்படுத்தப்படும் விறகில் இருந்து எரியாத வாயுக்களினதும் காபன் துணிக்கைகளினதும் மூன்றில்ஒரு பகுதிக்கும் மேல்வீணாகி விரயமாகின்றது.



விறகை மீச்சம் பிடிக்கக்கூடிய புதிய சூட்டடுப்பு இதுதான்

இதனைத்தடுப்பதற்காகவே புதிய சூட்டடுப்பில் இரண்டாவது அடுப்பு அமைக்கப் பட்டுள்ளது. விறகு எரியும் போது விரயமானவற்றைக் குழாய் மூலம் இரண்டாவது அடுப்புக்கு அனுப்பி மறுபக்கத்தில் உள்ள அடுப்பில் ஒட்சிசனுடன் சேர்ந்து மேலும் தகனம் உருவாகிறது. இம்முறையால் விரயமாகும் மூன்றில் ஒரு பங்கில் சுமார் எழுபது வீதத்திற்கு மேற்பட்ட விரயப்பொருள்கள் தகனத் தாக்கத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.

### ஒரே நேரத்தில் இரு சமையல்

இதனால இந்த அடுப்பினைப் பாவித்து ஒரே நேரத்தில் இரு பாத்திரத்தில் தனித்தனியாக இருவேறு சமையல்களைத் தங்களின் சமையலை தனித்தனியே சமைப்பதற்குத் தேவையான மூலப்பொருள்களில் கிட்டத்தட்ட நாற்பது வீதத்தினைச் சேமிக்கக் கூடியதாக இருக்கும்.

இன்றைய காலகட்டத்தில் விறகின் உபயோகம் மட்டுப் படுத்தப்பட வேண்டியுள்ளது. வன வளமும் பாதுகாக்கப் படவேண்டும்.

அன்றாட உணவு சமையல் வேலைக்காக நாளாந்தம் மக்களுக்கு பெருந்தொகையான விறகு தேவைப்படுகிறது. இயன்ற அளவு விறகின் தேவையை சிக்கனமாக உபயோகப்படுத்துவதற்கு என தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள சிக்கன இரட்டைச் சூட்டடுப்பு பயனுள்ளதாக மக்கள் மத்தியில் பிரபலமடைந்து வருகிறது.

இந்த அடுப்பின் மூலம் ஒரே முறையில் இரு வேறு சமையல்களைச் செய்ய முடியும். இதனால் விறகின் தேவையில் முப்பது வீதம் குறைகிறது. ஒரே வெப்பத்தில் இரு வேலை முடிகிறது. இந்த அடுப்பை தமிழீழ ஆய்வு நிறுவனம் உற்பத்தி செய்து விநியோகிக்கிறது.

மண் சட்டி, பானை உற்பத்தியில் ஈடுபட்டு தற்போது வேலையற்றிருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் நிறுவனம் முன்வந்துள்ளது. அடுப்பு உற்பத்தியில் வேலை வாய்ப்பு பெற விரும்புபவர்கள் தமிழீழ ஆய்வு நிறுவன அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

புதிய சூட்டடுப்புத்தேவைப் படுவோரும் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (அ)

## நல்லூரில் சாரணர் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தையொட்டி இம் முறையும் யாழ். மாவட்ட சாரண சங்கத்தின் சாரண சேவை, உதவி மாவட்ட ஆணையாளர் திரு. சு.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த சேவையில் திரி சாரணர்களும் சிரேஷ்ட சாரணர்களும் பங்கு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### பங்கீட்டு அட்டை

மயிலணி, ஜூலை 29

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் தனது கிளைகள் மூலம் மக்களுக்கு பங்கீட்டு அட்டையை விநியோகம் செய்து வருகிறது.

## மாநிலங்கள் சபைக் கூட்டம் அடுத்த வாரம் பெங்களூரில்

புதுடில்லி, ஜூலை 29

இந்தியாவில் முதன்முதலாக அமைக்கப்பட்ட மாநிலங்கள் சபையின் முதலாவது கூட்டம் அடுத்து வரும் சனிக்கிழமை பெங்களூரில் நடைபெறவுள்ளது.

பிரதமர் வி. பி. சிங். இக் கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.

மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்குவது சம்பந்தமாக சர்க்காரியா கமிஷன் சமர்ப்பித்த அறிக்கையில் செய்யப்பட்ட சிபார்சின் மீதே இந்த மாநிலங்கள் சபையை தேசிய முன்னணி அரசு அமைத்துள்ளது.

## ஜீ. சி. ஈ. சாதாரண....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர்.

யாழ். இந்துக் கல்லூரி: ஏழு- அதிவிசேட சித்தி-ஏழு பேர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி; ஐந்து அதிவிசேட சித்தி-ஒருவர்.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி: ஏழுஅதிவிசேட சித்தி -இருவர்.

திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்); ஏழு அதிவிசேட சித்தி-ஒருவர்.

யாழ். மத்திய கல்லூரி: ஏழு அதிவிசேட சித்தி - ஒருவர்

செங்குந்த இந்துக் கல்லூரி: நாலு அதிவிசேட சித்தி-ஒருவர்.

**வடமராட்சி**

ஹாட்லிக் கல்லூரி; ஏழு அதிவிசேட சித்தி - ஒன்பது பேர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் -ஏழு அதிவிசேட சித்தி-மூன்றுபேர்.

உடுப்பிட்டி ஞானாசிரியர் கல்லூரி:ஏழுஅதிவிசேட சித்தி -ஒருவர்.

உடுப்பிட்டி ஏ. எம். சி. பாடசாலை:ஏழு அதிவிசேட சித்தி-ஒருவர்.

வட-இந்துமகளிர் கல்லூரி: ஏழு அதிவிசேட சித்தி -இருவர்.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி:ஏழு அதிவிசேட சித்தி-ஒருவர்.

வல்வை மகளிர் மகா வித்தியாலயம்: ஏழு அதிவிசேட சித்தி- மூவர்.

**தென்மராட்சி**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி:ஏழு அதிவிசேட சித்தி-இருவர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி: ஏழு அதிவிசேட சித்தி-மூவர்.

**வலிகாமம்**

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி- ஏழு அதிவிசேட சித்தி- நால்வர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி-ஏழு அதிவிசேட சித்தி- நால்வர்.

கோப்பாய் அத்தியார் இந்துக் கல்லூரி: ஆறுஅதிவிசேட சித்தி-ஒருவர்.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி-ஐந்து அதிவிசேடசித்தி-மூவர்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி: ஆறு அதிவிசேட சித்தி இருவர்.

உடுவில் மகளிர் கல்லூரி: ஐந்து அதிவிசேட சித்தி- -மூவர்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்: ஐந்து அதிவிசேட சித்தி- ஒருவர்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி; ஆறு அதிவிசேடசித்தி- இருவர்.

**தீவுப்பகுதி**

மண்டைதீவு மகளிர் வித்தியாலயம்- இரண்டுஅதிவிசேட சித்தி- மூவர்.

அல்லைப்பிட்டி மகாவித்தியாலயம்:இரண்டு அதிவிசேட சித்தி- ஒருவர்.

[இ-3-5]

## தமிழக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக அமையும் என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

வடக்கு - கிழக்கில் சண்டை தொடங்கிய பின்னர் திரு. கருணாநிதி பிரதமர் சிங்கை நேரடியாகச் சந்திப்பது இது இரண்டாவது தடவையாகும். பிரதமரின் அழைப்பின் பேரிலேயே முதலமைச்சர் புதுடில்லி செல்வதாகவும் அறிவிக்கப்பட்டது.

இவ்விஜயத்தின்போது சேது சமுத்திரத்திட்டம் உட்பட மாநில வளர்ச்சிப் பணிகள் குறித்துப் பேசவிருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார். [ஒ]

## திருமலை---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

- ★ எஸ்.எல்.ஆர் மகஸீன்-6
- ★ தொலைத் தொடர்பு சாதனம் - 1
- ★ தலைக் கவசம் - 1
- ★ ஜே. ஆர். கைக்குண்டு-6

இந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான பாபு வீரமரணம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை ஆயுதப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பகுதி என்று கூறிக்கொள்ளும் பிரதேசத்தில் வைத்துத்தான் இத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கொழும்பில் உள்ள பி. பி. சி. செய்தியாளர் அறிவித்தார். (உ-எ-9)

## மத்திய கல்லூரி லியோ கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். மத்திய கல்லூரி லியோ கழக உறுப்பினர்கள், சாரணர்கள் உயர்தர மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## தொல்பொருள் ஊழியருக்கு சம்பளம் இல்லை

நெடுந்தீவு, ஜூலை 29

யாழ். பிரதேச தொல் பொருள் திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த ஜூன், ஜூலை மாதங்களுக்கான சம்பளம் இன்னமும் வழங்கப் படவில்லை.

அனுராதபுரம் தொல் பொருள் திணைக்களத்தினூடாகவே இவர்களுக்கான சம்பளம் வழங்கப்படுகின்றது. (இ-111)

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணத்தில் சைக்கிள் திருட்டு அதிகரித்துவருகிறது. நல்லூர் செட்டித் தெருவில் உள்ள ஒரு வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று காணாமல் போய்விட்டது. (இ-111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

29 - 7 - 1990 ஞாயிற்றுக்கிழமை


# வடக்கு, கிழக்குக்கு தனித்தனி பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள்

## 87 ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாம்

கொழும்பு, ஜூலை 29 வடக்கு மாகாணத்துக்கு தனியான பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரையும்- கிழக்கு மாகாணத்துக்குத் தனியானபிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவரையும் நியமிக்கஇலங்கை அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக இந்திய வானொலி அறிவித்தது.

1987 இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முரணாக இந்த நியமனங்கள் இருப்பதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் இரண்டு மாகாணங்களையும் இணைத்து, அதற்கு ஒரு பிரதி பொலிஸ்மா அதிபரை நியமிக்க வழி செய்திருந்தது.

அந்த இணைப்பை நீக்கும் முதல் நடவடிக்கையாக இந்தத் தனித்தனிபிரதி பொலிஸ்மா அதிபர் நியமனங்கள் அமைந்துள்ளன என்றும் இந்திய வானொலி தெரிவித்தது.

தற்போது இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பிரதி பொலிஸ்மாஅதிபராக திரு. ரி. எஸ். ஆனந்தராஜா இருந்து வருகிறார். (இ-எ)

## திருமலையில் தேடுதல் "முகமூடி"களின் உதவியுடன்

யாழ்ப்பாணம், ஜூலை 29 திருகோணமலைப் பகுதியில் முகமூடி நபர்களின் உதவியுடன் படையினர் தேடுதல் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட சில பகுதிகளை காலையில் சுற்றிவளைக்கும் படையினர் வீடு,வீடாகச் சல்லடைபோட்டுத் தேடுகின்றனர். இத்தேடுதல் நடவடிக்கை மாலைவரை- நாள் முழுவதும் - நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே படையினரால் வழங்கப்பட்ட கார்ட் (பச்சை நிறத்திலானது) இல்லாதவர்கள் விசாரணைக்காகக் கூட்டிச்செல்லப்படுகின்றனர். (ஒ-10)

## உயர் கல்வி பயிலுவதற்கு 61 ஆயிரம் மாணவர் தகுதி

ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களில் சுமார் 61 ஆயிரம்பேர் உயர் கல்வி பெறுவதற்கான தகைமையைப் பெற்றுள்ளனர்-

கடந்தவாரம் வெளியான ஜீ. சி. ஈ. சாதாரணதரப்பத்திரப் பரீட்சையின் பெறுபேறுகளில் இருந்து இதுதெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## நெடுந்தீவு பரீட்சை முடிவு நேற்று அனுப்பப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29 நெடுந்திவுக்கான ஜீ.சி.ஈ (சாதாரணதர) பரீட்சை முடிவுகளை நேற்று அனுப்ப முடியாத நிலை இருந்ததாக யாழ்.கல்வி அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

நெடுந்தீவு ஆர். சி பாடசாலையைச்சேர்ந்த டி கிறிஸ்தோபர் த. அருளானந்தன், கலாகுலசேகரன், எம். ஏபிரகாம் செபமாலை, ஜோசேப், ஜோசேப் ஆகியோரும்-

நெடுந்தீவு மத்திய வித்தியாலயத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம், கிருஷ்ரி ஞானராஜ் ஆகியோரும் -

நெடுந்தீவு சிவப்பிரகாசம் வித்தியாலயத்தைச் சேர்ந்த சுபாஜினி, உதயகுமார்,செல்வகுமார், இந்திராதேவி ஆகியோரும்-

உயர் வகுப்பில் கல்விபெற சித்தியடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தென்மராட்சியில் அகதிகள்

சாவகச்சேரி, ஜூலை 29 பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து சுமார் 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக தென்மராட்சிப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர். (ஒ-51)

## நயினையில்

புங்குடுதீவு, ஜூலை 29 நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஸ்ரீ சக்கர யந்திரபூசை ஆடிப்பூரத் திருவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (இ - 131)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் சிவராமலிங்கம்

தங்கரத்தினம் சிவராமலிங்கம் காலமானார். அன்னார் திரு. சு. சிவராமலிங்கத்தின் (ஓய்வு பெற்ற விரிவுரையாளர்) அன்பு மனைவியும், திருமதி. சுந்தரலக்சுமி யோகநாதன், சந்திரகுமார்(பிரான்ஸ்), சூரியகுமார் (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்), சாந்தகுமார் (பிரான்ஸ்), ஜெயக்குமார்(சுவிஸ்), ரெட்ணகுமார்(இந்தியா) சிவகுமார்(இந்தியா), சாந்தலக்சுமி ஆகியோரின் அன்புத் தயாரும், திரு. செ. யோகநாதன் (முன்னாள் உதவி அரச அதிபரும் எழுத்தாளரும்) குமுதினி, சாரதாதேவி, மாதுருதேவி, ஞானகலா, ஆகியோரின் அன்பு மாமியாரும், சதியன் (யாழ். பரியோவான் கல்லூரி விஞ்ஞான பீடம்முதலாம் ஆண்டு), ஜெயபாரதி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று (29-7-90) ஞாயிறு நண்பகல் 12 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

27, மூத்தவிநாயகர் லேன்,
கச்சேரி- நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கணவர்
சு. சிவராமலிங்கம்.

[13696]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 லக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## 4 கரண்டி எண்ணையுடன் 4 மணி நேரம் எரியும் விளக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 29 கஷ்டம் வந்தால் சிக்கனம் தானாகவே வரும். அது மட்டுமல்ல.

கஷ்டம் வந்தால் கண்டுபிடிப்புகளும் வரும்.

இன்றைய எரிபொருள் கஷ்டத்தில் குறைந்த மண்ணெண்ணையுடன் எரிக்கக்கூடிய போத்தல் விளக்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாலை ஆறு மணிதொடக்கம் இரவு பத்துமணி வரை குப்பி விளக்கு ஒன்றை எரிப்பதற்குசராசரி சுமார் ¼ போத்தல் மண்ணெண்ணை தேவை.

குப்பி விளக்கு தரும் வெளிச்சத்தை போன்று அதே அளவு வெளிச்சத்தை [நான்குமணித்தியாலங்களுக்குப்] பெறுவதற்கு 4 மேசைக்கரண்டி மண்ணெண்ணையுடன் எரிக்கக் கூடிய புதிய ரக போத்தல் விளக்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் புதிய விளக்கின் அமைப்பு இதுதான்:-

ஒரு ஜாம்போத்தல். அதன் வாய்க்கு ஒரு நீளமான தகர மூடி. போத்தலின் அடியில் சிறிதளவு பஞ்சை வைக்க வேண்டும்.

அந்தப்பஞ்சில் மண்ணெண்ணையை ஊற்றி ஊறவிட வேண்டும்.

போத்தலின் வாய் மூடியில் தொங்கவிடப்பட்ட ஒரு கம்பியில் சைக்கிள் ''வால்வ்'' கட்டை ஒன்று இணைக்கப்படும். ''வால்வ்'' கட்டைக்குள் இரண்டு அங்குல காகிதத் திரி வைக்கப்படும். திரியின் அடிப்பகுதி பஞ்சில் முட்டக்கூடியதாக 'வால்வ்' கட்டை தொங்கவிடப்பட வேண்டும்.

திரியின் மேற்பகுதியைக் கொளுத்த வேண்டியதுதான் விளக்கு வேலை செய்யத் தொடங்கும்; பிரகாசமாக எரியும்.

பிரகாசத்தை - வெளிச்சத்தை அதிகரிக்கவேண்டுமானால் திரியின் எரியும் முனையின் உயரத்தைச் சற்றே உயர்த்தி ஒருமேசைக்கரண்டி எண்ணெய்யை அதிகமாகவிட்டால் சரி.

புகை வெளியேறுவதற்கு போத்தலில் வாய்மூடியில் சிறு துவாரம் வைக்கப்பட்டிருக்கிறது.

நீங்களும் பரீட்சித்துப் பாருங்களேன்.

இந்தப் புதிய சிக்கனக் குப்பி விளக்கைக் கண்டுபிடித்தவர்கள் சுண்டிக்குளியைச் சேர்ந்த சுகே பஸ்தியாம்பிள்ளை என்பவரும் அவரது உதவியாளர் ஜேசுதாசனும் ஆவார்.

இந்த விளக்கு சுண்டிக்குளிப் பகுதியில் இப்போது பிரபல்யம் அடைந்துவருகிறது! (அ-9)

## கிளிநொச்சி பரீட்சை முடிவு யாழ்ப்பாணம் வந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 29 கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலைகளின் ஜீ. சி. ஈ. [சாதாரணம்] பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணம் வந்துள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட முடிவுகளுடன் இந்த முடிவுகளும் தவறுதலாக வந்துசேர்ந்துள்ளன.

கண்டாவளை மகாவித்தியாலயம், நாச்சிக்குடா முஸ்லிம் மகாவித்தியாலயம், இரணைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலை, வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் முடிவுகளே இங்கு வந்துள்ளன. [இ-3]

## யாழ். பிரதம தபாலகம்

கொழும்புத்துறை, ஜூலை29 தற்போதைய நெருக்கடியான நிலைகருதி யாழ் பிரதம தபால் அலுவலக நேரம் காலை 9 மணி முதல் 12 மணி வரையாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்றநிலை ஏற்படுமாயின் அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-30)

## தம்பாட்டியில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 29 நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று தம்பாட்டி பகுதியில் பயணிகளை ஏற்றி இறக்கும் சேவையிலீடுபட்ட பாதை மீது வீழ்ந்து வெடித்தது.

இதில் 2 பொதுமக்கள் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## குடாநாட்டில் அரிசியின் விலை திடீரென அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 29 யாழ். குடாநாட்டில் அரிசியின் விலை தினமும் ''கிடு கிடு'' வென உயர்ந்து கொண்டே செல்கிறது.

கூட்டுறவு கடைகளில் கிலோ 16 ரூபா 50 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்ட அரிசி 19 ரூபா 50 சதமாக உயர்ந்துள்ளது.

தனியார் சந்தையில் அரிசி விலை பெரும் உயர்வு கண்டுள்ளது.

அரிசியின் விலை ஏற்றத்தால் சாதாரண தர மக்கள் பட்டினியைஎதிர் நோக்க வேண்டிய அபாய நிலை தோன்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின்சாரத் தடை மற்றும் வெளியூர்களுக்கான போக்குவரத்து சீரற்ற நிலை ஆகிய காரணங்களாலேயே குடாநாட்டில் அரிசியின் விலை இந்தளவுக்கு உயர்ந்துவிட்டதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10)

## வடக்கு - கிழக்கு நெருக்கடி: அரசியல் தீர்வு வேண்டும்

### ஜனாதிபதிக்கு 2இயக்கங்கள் கடிதம்

கொழும்பு, ஜூலை 29 வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கு அரசியல் தீர்வையே அரசாங்கம் காணவேண்டும்.

இப்படி ஈ.பி. ஆர். எல்.எப். இயக்கமும் ஈ. என். டி. எல். எப். இயக்கமும் ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கேட்டுள்ளன.

இந்த இரண்டு இயக்கங்களும் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு தனித்தனியாக எழுதிய கடிதங்களில் முன்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

'வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைத்ததே தற்போதைய பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துள்ளது.,

'வடக்கு - கிழக்கு மாகாணத்தை தமிழர்களின் பாரம்பரிய தாயகமாக இலங்கை அரசு அங்கீகரிக்கவேண்டும்'.

'நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணுவதற்கு இலங்கை அரசின் தற்போதைய போக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது'

—இப்படி இரு இயக்கங்களும் எழுதிய கடிதங்களில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## களவு

யாழ்ப்பாணம், ஜூலை 29 நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இருந்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலி பெருக்கி சாதனங்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது. (இ - 3)

## இந்திய அரசியல் கட்சிக்குழு வரும் திகதி பற்றி முடிவில்லை

கொழும்பு, ஜூலை 29 இந்தியாவில் இருந்து அனைத்து அரசியல் கட்சி எம்பிக்கள்குழுஒன்றுஇலங்கை வருவதற்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

இலங்கைக்கு அனைத்துக் கட்சிக்குழு ஒன்றை அனுப்பி நிலைமையைப் பார்வையிடுமாறு புதுடில்லிக்குச் சென்றிருந்தபோது நாம் விடுத்த அழைப்பை அங்குள்ள அரசியல்கட்சித் தலைவர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டனர் என்றும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். (இ-எ)

## இராணுவ....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி இராணுவத்தின் உதவியை நாடும் உத்தேசம் உண்டா என்று செய்தியாளர்கள் திரு. விஜேதுங்காவிடம் கேட்டனர்.

அப்படி எவ்வித உத்தேசமும் இல்லை என்றும், உள்நாட்டு விவகாரத்தை இலங்கை அரசாங்கமே சமாளித்துக் கொள்ளும் என்றும் அவர் பதிலளித்தார்.

மாலைதீவின் 25 ஆவது ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு அவர் நேற்று பிற்பகல் கொழும்பு திரும்பினார். [உ-எ]

## லைபீரிய அரசு கவிழ்ந்தது

மொன்றோவியா, ஜூலை 29 லைபீரிய ஜனாதிபதி சாமுவல் டோவின் அரசு கவிழ்க்கப்பட்டு விட்டதாக கிளர்ச்சிப் படைகளின் தலைவர் சார்ள்ஸ்ரெய்லர் நேற்று அறிவித்தார்.

வானொலி மூலம் விடுத்த அறிவிப்பு ஒன்றில் இத்தகவலை வெளியிட்ட இவர், நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவந்திருப்பதாகவும் அறிவித்தார்.

ஜெனரல் டோவின் அரசுக்கு எதிரான ஆயுதக்கிளர்ச்சி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பித்தது தெரிந்ததே. (இ-எ)

## திருமலையில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) துவது தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளைப் படையினர் மேற்கொண்டு வருவதாகவும் அறிய வந்தது.

இதேவேளை, திருகோணமலை பஸ் நிலையப் பகுதியில் மீண்டும் சிங்களவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அங்கிருந்து வந்த அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

## ட்ரினிடாட் பிரதமர் பணயக் கைதியானார்!

லண்டன், ஜூலை 29 கரிபியன் தீவுகளில் ஒன்றான ட்ரினிடாட் ருபாகோவில் பிரதமரையும், அவரது பெரும்பான்மையான அமைச்சர்களையும் கறுப்பின முஸ்லிம் தீவிரவாதக் குழு ஒன்று பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தில் இவர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிப்பதற்காக ஆங்கிலிக்கன் மதகுரு ஒருவர் பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

தீவிரவாதிகளுக்கு லிபியாவின் ஆதரவு இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இதனிடையில், தீவின் பதில் ஜனாதிபதி அவசரகால நிலைமையைப் பிரகடனஞ் செய்திருக்கிறார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நேசமணி இராசையா

பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த திருமதி நேசமணி இராசையா காலமானார்.

இவர் காலஞ்சென்ற புறொக்டர் இராசையாவின் (கொட்டடி) அன்பு மனைவியும், சாவித்திரி, பரிமேலழகன் (லண்டன்), நித்தியானந்தன் (கணக்காளர்- இ. போ. ச., கோண்டாவில்), ஸ்ரீரங்கன் (கணக்காளர் - கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு), சத்தியபாமா, ஜனகன், ஜெயராணி, ஜனக்குமார் (அசோகா ஜுவலர்ஸ் உரிமையாளரும், ரியூசன் ஆசிரியரும்), சிவக்குமாரி, விஜயகுமாரி, காலஞ்சென்ற அசோக் இளமுருகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சபாநந்தன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்), வசந்தி (லண்டன்), ஜமுனகுமாரி (இ. போ. ச. - கோண்டாவில்), இந்திரா, சுமதி (லண்டன்), ஸ்ரீநிவாசன், ஸ்ரீதயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், வடக்கு அராலி முருகமூர்த்தி ஆலயத்திற்கும், அராலி தேவாலயத்திற்கும் அருகில் இருக்கும் அன்னாரின் தற்போதைய இல்லத்திலிருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அராலி வடக்கு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஜனக்குமார்
(அசோகா ஜுவலர்ஸ்)

(13695)

### துரைச்சாமி நடராசா (முத்துலிங்கம்)

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு பன்னிரண்டாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கொழும்பு ஜம்பட்டா வீதி பிரபல வர்த்தகர் திரு. துரைச்சாமி நடராசா (முத்துலிங்கம்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற துரைச்சாமியினதும், பொன்னுமுத்துவினதும் அன்பு மகனும், பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கலாவல்லி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி)யின் நேசத்தந்தையும், கதிரேசபிள்ளை (கனடா), கந்தையா, பரஞ்சோதி, விநாயகமூர்த்தி (சுவிஸ்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தாமோதரம்பிள்ளை விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருகரும், கனகரத்தினம், விஜயரத்தினம் (சுவிஸ்), சரஸ்வதி சுந்தரலிங்கம், கமலாம்பிகை சாந்தலிங்கம் (ஜேர்மனி), இராசலட்சுமி தர்மலிங்கம் (ஜேர்மனி), செல்வரத்தினம் (யாழ்-கச்சேரி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-07-90 ஞாயிறு மாலை 3மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
திருமதி ந. பார்வதிப்பிள்ளை

12ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

[13849]

### பிரான்சிஸ்பிள்ளை யோசேப் (இளைப்பாறிய அதிபர்)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரான்சிஸ்பிள்ளை யோசேப் (இளைப்பாறிய அதிபர்) 28-07-90இல் இறைபதம் சேர்ந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற பிரான்சிஸ்பிள்ளை அனந்தாசி ஆகியோரின் அன்பு மகனும், ஞானரெத்தினத்தின் அன்புக் கணவரும், விக்ரர் இம்மானுவேல் (J.R. றேடிங் கொழும்பு), மேரி திரேசா (வவுனியா), யூஜின் றெஜிஸ், றெஜினா, கிறிஸ்ரி, றஞ்சினி, நெல்சி (ஜேர்மனி), ஜெறி (கனடா), றோசினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலா (கொழும்பு), டேவிற் பஸ்தியாம்பிள்ளை (வவுனியா), பகவதி (A. G. A. அலுவலகம், சண்டிலிப்பாய்), செல்வநாயகம் (கச்சேரி முல்லைத்தீவு), அல்பிரட் (ஆசிரியர் ஜசிந்தா), யோகரெத்தினம் (ஜேர்மனி), சிறாணி (கனடா), அருள்நேசன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமனும், பயஸ் பிரான்சிஸ்பிள்ளை (கனடா), றெபெக்கா மரியநாயகம் (லண்டன்), காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மேரிப்பிள்ளை, இராசம்மா, நீக்கிலாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரது நல்லடக்கம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலியுடன் பண்டத்தரிப்பு சேமக் காலையில் இடம் பெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
யோ. இ. றெஜிஸ்

''இரத்தினபதி''
பண்டத்தரிப்பு.

[13952]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org